# DEPOSITION OF WITNESS
# IN THE COURT OF DISTRICT MUNSIF CUM JUDICIAL MAGISTRATE, THIRUVIDAIMARUTHUR.

| | | | |
|---|---|---|---|
| Deposition of Witness for | : PW-1 | Date | : 21.03.2024 |
| Case No. | : **O.S. 399/2019** | Nationality | : Indian |
| Name | : லியோனார்டு தேவசகாயம் | Religion | : |
| Father's/Husband's Name | : சந்தானம் | Age | : 46 |
| Village | : | | |
| Taluk | : | | |

<u>வா.சா.1</u>

சாட்சி சத்திய பிரமாணம் செய்து விசாரிக்கபடுகிறார்.

**5 முதல் 9 பிரதிவாதிகள் தரப்பு குறுக்கு விசாரணை**

இவ்வழக்கில் நான் 5 முதல் 9 பிரதிவாதிகளுக்கு எதிராக பரிகாரம் எதுவும் கோரியுள்ளேனா என்றால் பரிகாரம் கோரியுள்ளேன். எனது கொள்ளு தாத்தா தேவசகாயம் பிள்ளையின் இறப்பு சான்றை இவ்வழக்கில் தாக்கல் செய்துள்ளேனா என்றால் இல்லை. அவர் எந்த தேதியில் இறந்தார் என்ற விவரம் எனக்கு தெரியுமா என்றால் 1916 ம் ஆண்டு இறந்துவிட்டார். அவர் 1916 ம் ஆண்டு இறந்துவிட்டார் என்பதை நான் எவ்வாறு தெரிந்து கொண்டேன் என்றால் எனது தாத்தா சவரிமுத்து கூறினார். தேவசகாயம் பிள்ளையின் மனைவி பெயர் என்னவென்றால் எனக்கு ஞாபகமில்லை. எனது வழக்கில் தேவசகாயம் பிள்ளையின் மனைவி பெயரை குறிப்பிட்டுள்ளேனா என்றால் இல்லை. எனக்கு அவர் பெயரே தெரியாது என்றாலும் நான் ஞாபகமில்லை என்று பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்றாலும் சரியல்ல. தேவசகாயம் பிள்ளைக்கு செல்வநாயகம், சவரிமுத்து, சாமிதுரை ஆகியோர் வாரிசுகள் என்பதை நான் எவ்வாறு தெரிந்துகொண்டேன் என்றால் எனது தாத்தா மற்றும் சித்தப்பா ஆகியோர் சொல்லி தெரிந்து கொண்டேன். செல்வநாயகம்,

சாமிதுரை மற்றும் சவரிமுத்து என்கிற சின்னதம்பி ஆகியோர் இறந்துவிட்டார்கள். மேற்படி 3 நபர்களின்இறப்பு சான்றிதழை இவ்வழக்கில் தாக்கல் செய்துள்ளேனா என்றால் செல்வநாயகம் மற்றும் சாமிதுரையின் இறப்பு சான்றிதழ்கள் இல்லை. சவரிமுத்துவின் இறப்பு சான்றிதழை எனது வழக்கறிஞரிடம் கொடுத்துள்ளேன். செல்வநாயகத்தின் வாரிசு சான்று தாக்கல் செய்துள்ளேனா என்றால் இல்லை. சாமிதுரை ரஞ்சிதத்திற்கு பெண் வாரிசுகள் உள்ளார்களா என்றால் உள்ளார்கள் 2 பெண் வாரிசுகள் உள்ளார்கள். அவர்களுக்கு ஆண் வாரிசுகள் இல்லை. அந்த பெண் வாரிசுகளின் பெயர் தெரியுமா என்றால் எனக்கு ஞாபகமில்லை.

மேற்படி பெண் வாரிசுகளின் பெயரை எனது வழக்கில் சொல்லியுள்ளேனா என்றால் இல்லை. மேற்படி பெண் வாரிசுகளை இவ்வழக்கில் தரப்பினர்களாக சேர்த்துள்ளேனா என்றால் அவர்கள் ஆண் வாரிசுகள் இல்லை என்பதால் சேர்க்கவில்லை. இவ்வழக்கில் ஆண் வாரிசுகளை மட்டும்தான் சேர்த்துள்ளேன் என்றாலும் பெண் வாரிசுகள் யாரையும் சேர்க்கவில்லை என்றாலும் சரிதான்.தேவராஜூக்கு வாரிசு சான்று பெற்றுள்ளேனா என்றால் இல்லை. தேவராஜின் மனைவி பெயர் மேரி. வாசாஆ 1 ஆவணத்தில் தேவராஜின் மனைவி பெயரை சொல்லவில்லை என்றால் சரிதான். தேவசகயம் பிள்ளையின் வாரிசு விவரங்களை எனக்கு யார் சொன்னது என்றால் எனது தாத்தா , எனது சித்தப்பா அந்தோணிசாமி மற்றும் எனது அம்மா சொன்னார்கள். அந்தோணிசாமி தற்போது என்ன செய்து வருகிறார் என்றால் மலேசியாவில் அரசு அலுவலராக பணிபுரிந்து தற்போது ஓய்வு பெற்றுவிட்டார். மேற்படி வாரிசு விவரங்களை பற்றி எனக்கு கூறிய நபர்களை இவ்வழக்கில் சாட்சியாக விசாரிக்க முடியுமா என்றால் முடியும். 1,3 பிரதிவாதிகள் எனக்கு உறவினர்கள் இல்லை. 2, 4 பிரதிவாதிகள் எனக்கு உறவினர்கள் ஆவார்கள். 2ம் பிரதிவாதி

அந்தோணியம்மாள் தேவராஜின் மகள் ஆவார். 4ம் பிரதிவாதி தாமஸ் ஆல்வா எடிசன் என்பவர் தேவராஜின் மகளின் மகன் ஆவார். மேற்படி விவரங்களை வாசாஆ 1 ஆவணத்தில் குறிப்பிட்டுள்ளேனா என்றால் நான் 4 ஆண் வாரிசுகளை மட்டும்தான் சேர்த்துள்ளேன். பெண் வாரிசுகளை குறிப்பிடவில்லை. நான் பொறியியல் படிப்பு படித்துள்ளேன். நான் என்ன வேலை செய்து வருகிறேன் என்றால் புராஜக்ட் மேனேஜர் வேலை செய்து வருகிறேன்.

வாசாஆ 1 ஆவணத்தில் குறிப்பிடப்பட்டுள்ள மற்ற வாரிசுகளை இவ்வழக்கில் தரப்பினர்களாக சேர்க்கவில்லை என்றால் அவர்கள் எனக்கு பொது அதிகார ஆணவம் கொடுத்துள்ளதால் தரப்பினராக சேர்க்கவில்லை. மேற்படி பொது அதிகார ஆவணத்தை நீதிமன்றத்தில் தாக்கல் செய்துள்ளேனா என்றால் எனது வழக்கறிஞரிடம் கொடுத்துள்ளேன். நான் சொல்லியவாறு மற்ற வாரிசுகள் எனக்கு பொது அதிகார ஆவணம் கொடுத்திருந்தால் அதனை நீதிமன்றத்தில் தாக்கல் செய்திருப்பேன் என்றாலும் அவ்வாறு பொது அதிகார ஆவணம் கொடுக்கவில்லை என்பதால்தான் நான் தாக்கல் செய்யவில்லை என்றாலும் சரியல்ல. தேவசகாயம்பிள்ளை,செல்வநாயகம், சாமிதுரைமற்றும் தேவராஜ் ஆகியோர்களுக்கு இறப்பு சான்றிதழ் மற்றும் வாரிசு சான்றிதழ் பெறுவதற்கு நடவடிக்கை எடுத்துள்ளேனா என்றால் எடுத்துள்ளேன். அது தொடர்பான ஆவணங்களை நீதிமன்றத்தில் தாக்கல் செய்துள்ளேனா என்றால் வழக்கறிஞரிடம் கொடுத்துள்ளேன். நான் அது தொடர்பான ஆவணங்களை தாக்கல் செய்யவில்லை என்றாலும் வழக்கிற்காக பொய்யாக சொல்கிறேன் என்றாலும் சரியல்ல. எனக்கு நேரடியாக எதுவும் தெரியாது என்றாலும் மற்றவர்கள் சொன்னதின்பேரில்தான் நான் வழக்கு தாக்கல் செய்துள்ளேன் என்றாலும் சரியல்ல. பொதுவாக ஒரு கிராமத்தில் ஒரே பெயரில் 2 அல்லது 3 நபர்கள்

வசிப்பதற்கு வாய்ப்புள்ளதா என்றால் எனக்கு தெரியாது. வாசாஆ 4 வழக்கறிஞர் அறிவிப்பில் கொடுக்கப்பட்டுள்ள சொத்துக்களுக்கான மூல ஆவணங்கள் எதுவும் தாக்கல் செய்துள்ளேனா என்றால் புதிய மற்றும் பழைய செட்டில்மெண்ட் பதிவேடுகள் தாக்கல் செய்துள்ளேன். வாசாஆ 4 அறிவிப்பில் 16 சொத்துக்கள் குறிப்பிடப்பட்டுள்ளது என்றால் சரிதான். நான் எனது வழக்குரையில் 11 சொத்துக்களைதான் குறிப்பிட்டுள்ளேன் என்றால் நெடுஞ்சாலைதுறை நில எடுப்பு சம்மந்தப்பட்ட சொத்துக்களை மட்டும் குறிப்பிட்டுள்ளேன். நில எடுப்பு சம்மந்தமாக நான் மேல்முறையீடு எதுவும் செய்துள்ளேனா என்றால் செய்துள்ளேன். அவ்வாறு மேல்முறையீடு செய்ததற்கான ஆவணங்களை நீதிமன்றத்தில் தாக்கல் செய்துள்ளேனோ என்றால் எனது வழக்கறிஞர்டம் கொடுத்துள்ளேன்.

நான் தாவா சொத்துக்களில் குடியிருந்து வருகிறோமா என்றால் இல்லை. தாவா சொத்துக்கள் ஆக்கிரமிப்பு செய்யப்பட்டுள்ளது. மேற்படி ஆக்கிரமிப்புகளை அகற்றுவதற்கு நான் வழக்கு தாக்கல் செய்துள்ளேனா என்றால் மாவட்ட காவல் துணை கண்காணிப்பாளரிடம் புகார் அளித்துள்ளேன். நான் வாரிசு சான்றிதழ் கோரி முறைப்படி வட்டாட்சியரிடம் மனு கொடுத்தேனோ என்றால் கொடுத்துள்ளேன். நான் இவ்வழக்கில் திருவிடைமருதூர் வட்டாட்சியரை தரப்பினராக சேர்த்துள்ளேனா என்றால் இல்லை. தாவா சொத்துக்கள் திருவிடைமருதூர் தாலுக்காவிற்கு உட்பட்டது என்றால் சரிதான். நான் வழக்கிற்காக பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்றாலும் நான் கோரியுள்ள பரிகாரம் எனக்கு கிடைக்கதக்கதல்ல என்றாலும் சரியல்ல.

இவ்வழக்கில் அவசிய தரப்பினர்களை சேர்க்கவில்லை என்பதால் வழக்கு தள்ளுபடி செய்யதக்கது என்றால் சரியல்ல. தேசிய நில எடுப்பு ஆணையம் இழப்பீடு வழங்ககூடாது என்று நிரந்தர உறுத்துக்கட்டளை பரிகாரம் வழங்குவதற்கு இந்நீதிமன்றத்திற்கு அதிகார வரம்பு இல்லை என்றால் சரியல்ல.

x

Taken down by Typed to my dictation
in Open Court read over to the witness
admitted and acknowledged by
him/her to be correct.

Sd/- N. Sivapalani,
District Munsif cum Judicial Magistrate,
Thiruvidaimarudur.